# நடப்பு நிகழ்வுகள்- செப்டம்பர் 07 - 2017

- ❖ தேசிய ஊட்டச்சத்து வாரம் செப்டம்பர் 01 To 07

- ❖ ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக்கின் ஒரு பகுதியான ரஷ்கி தீவில் 2017, செப் 6-7-ல் கிழக்கு பொருளாதார மன்றம் தொடங்கியுள்ளது. அமெரிக்கா, ஜப்பான், சீனா, ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட 24 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். இந்தியாவின் சார்பில் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கலந்துகொள்கிறார்.

- ❖ இரயில்கள் தடம்புள்வதற்கும், விபத்துகள் ஏற்படுத்துவதற்கும் ஆளில்லாத ரயில்வே கேட்டுகள் பெருமளவு காரணமாக உள்ளதால் ஆளில்லா ரயில்வே கேட்டுகளை ஓராண்டுக்குள் அகற்ற வேண்டும் என ரயில்வே அமைச்சர் பியூஸ் கோயல் உத்திரவிட்டள்ளார். இரயில் என்ஜின்களில் மூடுபனி தடுப்பு LED விளக்குகளை பொருத்தவும் உத்திரவிட்டுள்ளார்.

- ❖ இந்தியா – நேபாளம் இடையே 12-வது கூட்டு இராணுவப் பயிற்சி “சூர்ய கிராண் 2017” நேபாள நாட்டில் தொடங்கியுள்ளது. இந்தியா – நேபாளம் இடையே 11-வது கூட்டு இராணுவப் பயிற்சி உத்திரகாண்ட் மாநிலத்தில் 2017 மார்ச் 7 முதல் 20 வரை நடைபெற்றது.

- ❖ திண்டுக்கல் மாவட்டம் பழனி நகரில் ரூ9.12 கோடி செலவில் 3 ஏக்கர் பரப்பளவில் காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட பொருட்களுக்கான தொடர் மேலாண்மைமையம் அமைக்கப்பட உள்ளது. அங்கு குளிர்பதன கிடங்குகள், உலர்த்தும் களங்கள், சேமிப்பு கிடங்குகள் உள்ளிட்டவை அமைக்கப்பட உள்ளன.

- ❖ கிரீஸ் நாட்டின் தலைநகர் ஏதென்ஸில் நடைபெறுகின்ற இளையோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் தொடரில் பெண்களுக்கான 56 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவைச் சேர்நத 15வயதான சோனம் மாலிக் ஜப்பான் வீராங்கனை சேனா நகமோட்டாவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார். மற்றொரு வீராங்கனை நீலம் 43 கிலோ எடைப்பிரிவில் ரோமானிய வீராங்கனையை வீழ்த்தி வெண்கல பதக்கம் வென்றார்.

OXFORD IAS ACADEMY

❖ இந்திய ஆடவர் ஹாக்கி அணி பயிற்சியாளராக நெதர்லாந்தின் ஜோர்ட் மாரிஜ்னே நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஏற்கனவே இந்திய மகளிர் அணியின் பயிற்சியாளராக உள்ளார். உலகக் கோப்பையை வென்ற ஜீனியர் ஹாக்கி அணியின் பயிற்சியாளர் ஹரேந்திர சிங் ஆடவர் சீனியர் அணியின் சிறப்புப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ இந்தியா – ஜப்பான் இடையே ஆண்டுதோறும் நடைபெறும் அமைச்சர் நிலையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக இந்திய பாதுகாப்பு துறை அமைச்சர் அருண் ஜெட்லி, அந்நாட்டு பாதுகாப்பு துறை அமைச்சர் இட்சுனோரி ஒனோடிரா இடையே தலைநகர் டோக்கியோவில் 06.07.17 அன்று பேச்சுவார்த்தை நடைபெற்றது.

❖ இந்தியாவுக்கு அமெரிக்காவின் அதிநவீன F16, F18 ரக போர் விமானங்களை விற்பனை செய்வதற்கு முழு ஆதரவு தருவதாக அந்த நாட்டு நாடாளுமன்றத்திடம் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அரசு தெரிவித்துள்ளது.

❖ சீனாவின் ஜியாமென் நகரில் நடைபெற்ற BRICS கூட்டமைப்பின் 9-வது மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் மோடி அரசுமுறை பயனமாக மியான்மர் நாட்டிற்கு சென்றார். அந்நாட்டின் தேசிய தலைவர் ‘‘ஆங் சான் சூகி’’யுடன் பிரதமர் மோடி 11 புரிந்துணர்வு ஒப்பந்தம் (06.09.17) அன்று கையெழுத்திட்டுள்ளனர்.

❖ ‘India`s Most Fearless: True Stories of Modern Military Heroes’ எனும் புத்தகத்தின் ஆசிரியர் - ஷிவ் அரூர் மற்றும் ராகுல் சிங்.

❖ இந்திய அரசின் “UJALA” (Unnat Jyoti by Affordable LEDs for All) எனப்படும் குறைந்த விலை எல்.இ.டி விளக்குகளை வழங்கும் திட்டம் Energy Efficiency Services Limited (EESL) நிறுவனத்தின் மூலம் மலேசிய நாட்டின் மேகலா மாநிலத்தில் துவங்கப்பட்டுள்ளது.

OXFORD IAS ACADEMY